

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் மேற்கு ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சியில் ரூபாய் 2 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய சமுதாயக் கூடத்தை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார். அருகிலி மாவட்ட ஊரக வளர்சி திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தி.மு.க. மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் மார்க்கிரேட் மேரி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பி முருகேசன், கூட்டுறவு துணைப் பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) எஸ்.பி.கார்த்திகேயன், இயக்குநர் செல்வகுமார், உட்படபலர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 27.12.2025 அன்று சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கண்டரமாணிக்கம், சேது இராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், பேருந்து, ரயில் பயண சலுகை அட்டைகள் மற்றும் பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் ஆகியவைகளை வழங்கினார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி எஸ்.தரைக்குடியில் நடைபெற்ற கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு சாயல்குடி மேற்கு ஒன்றிய கழகம் மற்றும் இளைஞர் அணி சார்பில் *1000* பேருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு தலைவர் தமிழ்நாடு வனம் மற்றும் கதர் தொழில் வாரியத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாநில, தொகுதி பார்வையாளர் வேல்முருகன் உட்பட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஜெயபாலன், குலாம் முகைதீன் சண்முகநாதன் கோவிந்தன் ஹரி முத்துராமலிங்கம் இளைஞர் அணி அமைப்பாளர் நாகரத்தினம், பிரான்ஸில் ராஜ் மற்றும் பலர் பங்கேற்றனர்.



திருச்செந்தூர் ஒன்றியம் பள்ளிப்பத்து ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார் உடன் ஒன்றிய செயலாளர் ஏ.பி. ரமேஷ், நகர செயலாளர் வாள் சுடலை, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபா, வி.பி.செல்வகுமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்க தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15 ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-